இதயம் ஓரம் மலரென உதிக்கும் ♥

இதயம் ஓரம் மலரென உதிக்கும்
இதழின் ஓரம் கனியென இனிக்கும்
பருவம் பதின் கொடியென படரும்
பரவசம் மனதில் பதிலென பரவும்!

சொல்லாது உள்ளம் உருகும்
கொல்லாது நெஞ்சம் துள்ளும்
திண்ணாது கண்கள் திணறும்
வெல்லாது அறிவும் வெட்கும்

அச்சில் வார்த்த வெல்லம்தான்
எச்சில் முத்தம் இனிக்குதடி
பிடித்து சுவைத்த கரும்புதான்
கடித்து பார்த்தால் கசக்குதடி

அள்ளி கொடுக்கிறேன் அன்பு
தள்ளி ஓடுகிறாய், ஏன் வம்பு!
சொல்லி கொடுத்துவிடு முத்தம்
அல்லி மலர்கையில், ஏன் சத்தம்?

உயிரை கொஞ்சம் உலுக்குது
உயிரை கொஞ்சி உய்க்குது
உலகில் உயிர்கள் பூக்குது
உலகம் உன்னால் சுழலுது

திசையெங்கும் பரவட்டும்
காதல் செய்யும் குறும்புகள்
தினந்தோறும் பூக்கட்டும்
காதல் மொட்டு அரும்புகள்!

2024